4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.